**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. I,**

**<u>Present : Tmt.M.Anusuruthi, B.A.,B.L.,(Hons)</u>**

**Judicial Magistrate No.I,**

**Tiruchirappalli.**

**CC.843/2022**

Deposition of Witness: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | வீரமணி | Father Name | கோவிந்த சாமி |
| Village | பொன்மலைப்பட்டி | Taluk | திருச்சி |
| Calling | | Age | 56/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969(Central Act 44 of 1969) on the day of 20.08.2025

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

<u>முதல் விசாரணை(அரசு தரப்பில்)</u>

1. நான் தற்போது திருச்சி, பொன்மலைப்பட்டி குற்றப்பிரிவு காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வடக்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல்நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, கடந்த 11.04.2022ம் தேதி நான் நிலையப் பொறுப்பில் இருந்தபோது, லால்குடியை சேர்ந்த சப்பாணி மகன் நடராஜன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று, நிலையக் குற்ற எண். 63/2022, ச/பி. 279, 337 இதச பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.).**

2. விபத்தில் காயம்பட்ட நபர் இறந்துவிட்டதாக அன்றையதினம் இரவு கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று, மறுநாள் மருத்துவமனைக்கு சென்று, விபத்தில் இறந்த சிவக்குமார் என்பவரை பிரேத பரிசோதனை செய்யவேண்டி, திருச்சி அரசு மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து, காலை 07.00 – 09.00 மணிவரை பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்ய உதவி செய்தேன். பின்னர், பிரேத பரிசோதனை முடிந்த பின்னர், இறந்த சிவக்குமாரின் உடலை அவரது உறவினர்கள் வசம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில் )</u>

1. சம்பவம் நடந்த இடமானது, காவேரி ஆற்றின் தெற்கு கரையில் உள்ள மூன்று சாலைகள் சந்திக்கும் சிக்னல் இருக்கும் இடம் என்றால், சரிதான். அந்த சாலையானது, காவேரி பாலம், ஸ்ரீரங்கம் பாலம், சத்திரம் பேருந்து நிலையம் செல்லும் சாலை ஆகியவை இணையக்கூடிய சாலை என்றால், சரிதான். அ.சா.1 அவரது புகாரில், அவர் மாயாஸ் ஹோட்டலில் வாட்ச் மேன் வேலை பார்ப்பதாக தெரிவிக்கவில்லை என்றால்,

சரிதான். அ.சா.4 பிரகாஷ் எந்த வகையான வாகனத்தில் சென்றார் என்பதை புகாரிலோ அல்லது போலிசார் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.

2. விபத்தில் காயம்பட்ட நபரான சுதாகர் என்பவரை யார் மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்று என்னுடைய விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால், புகார்தாரர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக சொன்னார். காயம்பட்ட சுதாகர் தானாகவே மருத்துமவனையில் சேர்ந்ததாக தான் விபத்து பதிவேட்டில் உள்ளது என்றால், சரியல்ல. காயம்பட்ட சுதாகர் தானாகவே மருத்துமவனையில் சேர்ந்துள்ளார் என்றாலும், சரிவர புலன் விசாரணை செய்யாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. விபத்தில் இறந்த நபரை அட்லஸ் மருத்துவமனை ஆம்புலன்ஸ் மூலம் ஆம்புலன்ஸின் டிரைவர் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால், சரிதான்.

3. சம்பவம் நடந்த 9 நாட்கள் கழித்து தான், இவ்வழக்கின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றால், சரிதான். புகாரைப்பெற்று, காயம்பட்ட நபர் யாரென்று தெரியாததால்,விசாரித்து, தெரிந்துகொண்டு, பின்னிட்டு 9 நாட்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றால், சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என்னால்/ என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் எழுதப்பட்டு, சாட்சிக்கு விளக்கப்பட்டு/படித்து காண்பிக்கப்பட்டு, அது சரியென வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

***Sd/- M. Anusuruthi,***
JM-I
Tiruchirappalli.